# கொக்குவில் இந்துக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் (கனடா)
## KOKUVIL HINDU COLLEGE
## OLD STUDENTS ASSOCIATION (CANADA)
## 2015

## 15 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்
## பேச்சுப் போட்டி

## நன்றி மறவேல்

**"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று"**

என்பது வள்ளுவன் கூறிய வாய்மொழியாகும். பிறர் எமக்குச் செய்யும் உதவியை என்றுமே மறந்துவிடல் ஆகாது. நாங்கள் என்றுமே தனித்து வாழ்ந்துவிட முடியாது. எமது தேவைகளை நிறைவேற்ற நாம் பலரது உதவியை பெறவேண்டி இருக்கும். அவ்விதமாக நாம் பெறும் உதவியை என்றும் நினைத்திருக்க வேண்டும். ஆனால் யாராவது எமக்குத் தீமை செய்திருந்தால் அதனை நாம் உடனேயே மறந்துவிட வேண்டும்.

எமக்கு ஒருவர் செய்த உதவி பெரிதாக இருக்கலாம் அல்லது சிறிதாகவும் இருக்கலாம். ஆனால் அந்த உதவி தக்க தருணத்தில் செய்யப்பட்டதாக இருப்பின் இவ்வுலகைவிடப் பெரிதாக அதனை மதிக்க வேண்டும். இக்கருத்தினையே வள்ளுவர்

**"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது"**

என்ற குறள் மூலம் கூறுகின்றார்.

நன்றியை என்றும் போற்றும் சான்றோர் அதனைப் பெரிதாக மதித்து வாழ்வர். நன்றி மறந்தவரை உலகம் நன்றி கெட்டவர் எனக் கூறிவிடும். இதற்குப் பயந்து வாழ்ந்தவர்களும், வாழ்பவர்களும் உண்டு. மகாபாரதம் எனும் இதிகாசத்தில் கர்ணன் நன்றி மறந்தவனாக மாறிவிடக்கூடாது என்பதற்காக கொடியவனான துரியோதனன் பக்கமே நின்றான். பாண்டவர்கள் தன் தம்பியர்கள் என அறிந்த பின்னரும் அவர்கள் பக்கம் சேரவில்லை. தன் நண்பன் செய்த உதவிக்காக செய்நன்றி மறவாத வீரனானான்.

மற்றுமொரு இதிகாசமான இராமாயணத்திலும் கும்பகர்ணன் தன் தமையன் இராவணன் செல்வது அதர்மவழி என அறிந்திருந்தான். எனினும் நன்றி மறவாது வாழ்வதே சிறந்த பண்பு என எண்ணினான். தன் அண்ணனுக்காக போர்க்களம் சென்று உயிரும் துறந்தான்.

சிறு வயதிலிருந்தே மற்றவர்கள் செய்யும் உதவியை மறவாது இருக்கப் பழக வேண்டும். அவற்றை நன்றியோடு நினைவில் வைத்திருக்கவும் பழகிக்கொள்ள வேண்டும். மனிதர்களிடம் இருக்கக்கூடிய மிகச்சிறந்த பண்புகளுள் நன்றி மறவாமையும் ஒன்றாகும். நாமும் பெற்றோர், உறவினர், நண்பர்கள், பிறர் என யார் செய்த உதவியையும் மறவாது வள்ளுவன் சொற்படி வாழ்வோம்.

-----------